கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் (கிராமிய நீர்க் கூறு) செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை அரசாங்கத்திற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 98 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.08(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது நிதி அமைச்சாகவுள்ள முன்னைய நிதி, திட்டமிடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் கிழக்கு மாகாண சபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் நீர் வழங்கல் வசதிகளை நிர்மாணித்து விரிவுபடுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரினை வழங்கி அதன் மூலம் பிரதேசத்தில் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றி வறுமையைக் குறைப்பதற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யப்பானிய யென் 6,054 மில்லியன்களாக காணப்பட்டதுடன் அதில் யப்பானிய யென் 4,904 மில்லியன் தொகையை நிதியளிப்பதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் உடன்பட்டுள்ளது. மேலும், யப்பானிய யென் 924 மில்லியன் செயற்திட்டத்தின் கிராமிய நீர்க் கூறுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந் நோக்கத்திற்காக யப்பானிய யென் 764 மில்லியனை நிதியளிப்பதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் உடன்பட்டுள்ளது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 மார்ச் 26 ஆந் திகதி தொடங்கியதுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலபடுத்தப்பட்டது. அதன்பின்னர் செயற்திட்டகாலம் 2014 யூலை 31 வரை நீடிக்கப்பட்டது. இருப்பினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினம் மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடந்திருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

செயற்திட்டத்தின் தேசியக் கூறு தொடர்பில் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 4.25 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்களும் ரூபா 10.89 மில்லியன் வட்டிக் கட்டணங்களும் கிராமிய நீர்க் கூறுக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தன.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 1 ஆம் பிரிவின் படி உள்நாட்டு வரிகள் மற்றும் தீர்வைகள் நிதியளிப்புக்கு தகுதியற்றவையாக காணப்பட்ட போதிலும், ரூபா 4.21 மில்லியன் தொகையான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி கடன் பெறுவனவுகளிலிருந்து மீள்நிரப்பட்டிருந்தது.

### 2.2.3 செலவின நடைமுறை கூற்றுடன் தொடர்புடைய சிக்கல்கள்

செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு மீள்நிரப்பல் நோக்கங்களிற்காக ரூபா 250.75 மில்லியன் கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்டவை மீது செலவினக் கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 183.35 மில்லியன் தொகை கடன் வழங்கும் முகவரால் மீளாய்வாண்டில் மீள் நிரப்பப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யப்பானிய யென் மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | யப்பானிய யென் மில். | ரூபா மில். |
| ஜேஐசீஏ | 764.00 | 972.01 | 316.60 | 282.85 | 231.65 | 1,180.57 |
| ஜீஓஎஸ்எல் | 160.00 | 203.56 | 110.92 | 100.77 | - | 230.72 |
| **மொத்தம்** | **924.00** | **1,175.57** | **427.52** | **383.62** | **231.65** | **1,411.29** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டக் காலப்பகுதியில் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 24 சிவில் நிர்மாண வேலைகளையும் குழாய்களை வைக்கும் செயற்பாடுகளையும் செயற்திட்டம் அமுல்படுத்தியிருந்தது. செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், அந்த செயற்பாடுகளில் 99 சதவீதமான வேலைகள் 2014 யூலை 31 வரையில் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 152.93 கிரயத்தில் புல்மோட்டை நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் சிவில் வேலைகள் மற்றும் குளாய்களை வழங்கி பொருத்துவற்காக 2012 இல் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்த் தாங்கியின் அடிப்பரப்பில் ஆறு இடங்களில் நீர்க் கசிவுகள் காணப்படுகின்றமை 2014 மே 28 ஆந் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் சுட்டிக் காட்டப்பட்டது. அதன் பின்னர் அவ்வாறான குறைபாடுகள் உப ஒப்பந்தக்காரர் ஊடாக ஒப்பந்தக் காரரால் நிவர்த்தி செய்யப்பட்டன. உப ஒப்பந்தக்காரர் 10 வருட காலத்திற்கு உத்தரவாதம் வழங்கியிருந்த போதிலும், மூல உத்தரவாதச் சான்றிதழை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு 2015 யூன் 30 வரை செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்திசைவினைப் பெற்றுக்கொள்ளாது புல்மோட்டை நீர்வழங்கல் திட்டத்தின் கீழ் புல்மோட்டை – கோக்கிளாய் வீதியில் யூ-பிவீசீ விநியோக குழாய்களை வைப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் விளைவாக, ரூபா 914,375 கிரயத்தில் இடப்பட்டிருந்த 1100 மீற்றர் நீளமுடைய யூ-பிவீசீ குழாய்கள் வீதி விரிவாக்கல் காரணமாக அவை வைக்கப்பட்டு 01 மாதத்தினுள் முற்றாக சேதமடைந்திருந்தன.

(iii) மேலும், நீர் பரிகார முறைமைக்கு நீரைப் பாய்ச்சும் நோக்கத்திற்காக புல்மோட்டை நீர்வழங்கல் திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 உள்வாங்கல் கிணறுகளில் யான் ஓயாவுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 01 உள்வாங்கல் கிணறு மின்சார வழங்கல் இன்மை காரணமாக 2015 யூன் 24 வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவிஸ்ரீபரவில் நீர் வழங்கல் திட்டமொன்றை செயற்திட்டம் அமுல்படுத்தியிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதவிஸ்ரீபுர பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்கள் சிறுநீரக நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்த போதிலும், சுத்திகரித்தல் நோக்கங்களிற்காக நீர் சுத்திகரிப்பு வசதியினை வழங்குவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நீர்ப்பாசன கிணற்றிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீர் நேரடியாக வீடுகளிற்கு விநியோகிகப்பட்டு வருகின்றமை வெளிக்களப் பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. இந்த நீர் வழங்கல் திட்டத்திற்காக செயற்திட்டம் ரூபா 149.45 மில்லியக் தொகையை செலவிட்டிருந்த போதிலும், பதவிஸ்ரீபுர பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற குடிநீரை கொள்வனவு செய்வதற்கு இப் பிரதேசத்திலுள்ள நலனாளிகள் மேலதிக கிரயத்தை செய்யவேண்டியிருந்தனர்.

(ii) சமூக பங்குபற்றுகையுடன் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பதவிஸ்ரீபுர நீர் வழங்கல் திட்டத்தின் பிரதான விநியோக வழியில் குழாய்களை வைக்கும் செயற்பாடுகளிற்காக ஒப்பந்தக்காரரால் ரூபா 1.10 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறு பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீரைப் பெறுவதற்கான 02 கிணறுகள், நீர்க் கோபுரம் மற்றும் நீர்ப்பாய்ச்சும் இல்லங்கள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 20.91 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தமொன்றை செயற்திட்டம் வழங்கியிருந்தது. நிர்மாண வேலைகள் இடம்பெறுகையில் 01 நீரைப் பெறும் கிணறு இடிந்து விழுந்திருந்தது. அதன்காரணமாக, நீரைப் பெறும் கிணற்றுக்குப் பதிலாக ரூபா 1.99 மில்லியன் கிரயத்தில் குழாய்க் கிணறொன்றை பொருத்துவதற்கு மேலுமொரு ஒப்பந்தத்தை செயற்திட்டம் வழங்கியிருந்தது. குழாய்க் கிணற்றின் பாய்ச்சல் கருவியை பொருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம், துளையின் விட்டம் 178 மி.மீ. ஆக காணப்படுதல் வேண்டும். இருப்பினும், பாய்ச்சல் கருவியை பொருத்துவதற்கு முன்னர் துளையின் விட்டம் 150 மி.மீ. இற்கும் குறைவாக காணப்பட்டது. அதன் விளைவாக, இந் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பாய்ச்சும் கருவியை பொருத்த முடியாதிருந்தது. மேலும், ஆழத்தில் 12 மீற்றர் வரையான நிலக்கீழ் துளையின் விட்டம் 225 மி.மீ. ஆக காணப்படுதல் வேண்டும். இருப்பினும் நிர்மாணிக்கப்பட்ட நிலக்கீழ் துளையின் விட்டம் 178 மீ.மீ. ஆகக் காணப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 99,755 பிடிகாசு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், குளாய்க் கிணற்றின் பொருத்தல் வேலைகள் அத்திகதியில் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரடியனாறு மற்றும் ஆலங்குளம் நீர் வழங்கல் திட்டத்தில் 2015 யூன் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக களப் பரிசோதனையில் அந்த நீர் வழங்கல் திட்டங்களின் நீர்ச் சுத்திகரிப்பு முறைமை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் கண்காணிக்கப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், பொது மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களின் சொத்துக்களினது பௌதீகமாக காணப்படுதலை உறுதிப்படுத்துவதற்காக சனசமூக நிலையங்களால் பொருட் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.